தமிழ்ச்சிட்டு

சிறுவர் கலையிதழ்



எங்கும், எதிலும் ஒழுங்கு உண்டு!

உண்ணும் வகையிலும்
உறங்கும் முறையிலும்
ஒழுக்கம் உண்டு;
உணர்ந்து கொள்!—தம்பி,
எண்ணும் நினைவிலும்
இயற்றும் வினையிலும்
ஏற்றவை உண்டு!
எண்ணிக் கொள்!

அமரும் நிலையிலும்
எழும் விரைவிலும்
அமைவுகள் உண்டு;
அறிந்துகொள்!—தம்பி,
நிமிரும் பொழுதிலும்
குனியும் பொழுதிலும்
நெறிகள் உண்டு;
தெரிந்துகொள்!

(தொடர்ச்சி: அடுத்த பக்கம்)

குரல்: 7
இசை: 1,2

விலை
25 காசு.

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

உலவும் நடையிலும்
உடுக்கும் உடையிலும்
ஒழுங்கு முறைகள்
பலவுண்டு!—தம்பி
குலவும் நட்பிலும்
குழையும் சிரிப்பிலும்
குறைகள் நேர்வதும்
மிகவுண்டு!

படிக்கும் நூலிலும்
பாடும் இசையிலும்
பயிலும் ஒழுங்குகள்
பலவாகும்!—நீர்
குடிக்கும் நிலையிலும்
குளிக்கும் பொழுதிலும்
கொள்ளும் முறைகளும்
சிலவாகும்!

உரைக்கும் சொல்லிலும்
ஓய்வுப் பொழுதிலும்
ஒழுங்குகள் உண்டு!
ஒதுக்காதே!—மடல்
வரையும் முறையிலும்
வாங்கும் நிலையிலும்
வரைமுறை உண்டு!
வழுக்காதே!

பார்க்கும் இடத்திலும்
பழகும் வகையிலும்
பண்பொடு நடக்கப்
பயின்று கொள்!—தம்பி
ஊர்க்குள், விட்டினுள்
உலகினுள்—நடக்கையில்
உயர்வாய்ப் பழகிட
உணர்ந்துகொள்!

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-7.-தி. பி. உ௲௪. இரட்டை-மடங் (சூலை-செப் 73)-இசை 1-2.

அன்பும் அறிவும்-6.

காரணியவறிவால் உந்தப்பெற்று, மாந்தன் தொழிலியல் வாழ்வை மேற்கொண்டபின், குடும்பங்கள் சிதறுகின்றன; கணவன் மனைவியரிடை வேறுபாடுகள் தோன்றுகின்றன. மக்களிடையே பல்வேறு குழுக்கள் முளையிடுகின்றன. அன்பையும் அறிவையும் தொழில் சார்ந்த பொருளியல் உணர்ச்சி வேறு பிரிக்கின்றது. அன்புக்கும் அறிவுக்கும் பொருள் மதிப்பு சார்கின்றது. அன்பு அறிவை அவாவுவதும், அறிவு அன்பை ஆராய்வதும் நேர்கின்றன. அன்பில் அறிவும், அறிவில் அன்பும் ஒடுங்கி அன்பியக்கமும் அறிவியக்கமும் தனித்தனியான உந்துணர்வுடன் இயங்கத் தொடங்குகின்றன. இந்நிலை உயிரியக்க வட்டப் பாதையில் எதிரெதிரான சுற்றின் மேனிலை விட்டமாகும். எனவே அன்பும் அறிவும் நேர் எதிராகச் செயல்படத் தொடங்குகின்றன. -

அறிவு பொருளியலைப் பற்றிப் புறம் போகின்றது. அன்பு அறவியலைப்பற்றி அகத்தே ஒடுங்குகின்றது. அன்பைப் பிரிந்து இயங்கும் நிலையில் மாந்தன் பாலை வாழ்வை மேற்கொள்கின்றான். அன்புக்குச் சிறந்ததாகிய இல்லறத்தைப் பிரிந்து மிகத்தொலைவான

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

தெரிந்து கொள்ளுங்கள்.

—நா. எழில்-மகிழ்நன்,

1. தமிழ் அகா முதலியை முதன் முதல் தொகுத்தவர் இத்தாலிய நாட்டைச் சேர்ந்த **வீரமா முனிவர்** (பெசுக்கி) என்னும் கிறித்தவராவர்.

2. உலகிலேயே முதுகெலும்புள்ள உயிரிகளில் மிகச்சிறியது, **'பிக்மியா'** என்னும் மீனினமாகும். இவை பிலிப்பைன்சு தீவிற்கு அண்மையில் காணப்படுகின்றன. இதன் நீளம் $\frac{3}{8}$ விரற்கிடை (inch) யாகும்.

3. நியூசிலாந்து (New Zealand) நாட்டில் வாழ்ந்து அழிந்து போன **முவா** (Moa) எனப்பெயருடைய பறவையே உலகிலேயே மிக உயரமுடையதாகும். இதன் உயரம் 12 அடி ஆகும்.

4. வௌவால் பறவையினத்திலும் விலங்கினத்திலும் சேராத ஒரு தனிப்பிறவி. இது பறவையே போல் பறக்கும், விலங்கைப்போல் குட்டி ஈனும். இதனைப் **பறக்கும் விலங்கு** (Flying Animal) என்றும் அழைப்பர்.

5. வாயைத் திறக்கும்போது எல்லா உயிரி (பிராணி)கட்கும் கீழ்த்தாடைத் தாழும். ஆனல் முதலைக்கு மட்டும் மேல் தாடை உயரும். கீழ்த்தாடை அசைவின்றியே இருக்கும்.

6. விக்டோரியா **இரிசியா** என்ற நிலைத்திணையின் இலையே, உலகிலேயே மிகப்பெரிய இலை. இதன் அகலம் $5\frac{3}{4}$அடியாகும்.

7. பாம்புகளுள் மிகப்பெரியவை தென் அமெரிக்காவிலுள்ள **அனக்கொண்டா** (Anaeonda)வும், இந்தியாவிலும் மலேயாவிலுமுள்ள பாந்தளுமே (Python). இவை 30 அடிக்கு மேற்பட்ட நீளமுள்ளவை; மாந்தனையும் விலங்குகளையும் பிடித்துச் சிறிது சிறிதாய் விழுங்குபவை.

8. உலகிலேயே மிக அகலமான பூ **இரப்புளீசியா** என்னும் பூவாகும். இதன் அகலம் $1\frac{1}{2}$ அடியாகும்.

9. உலகிலேயே மிக நீளமான பூ **அமோர்போ பாலசு** என்னும் பூவாகும். இதன் நீளம் 8 அடியாகும்.

10. உலகிலேயே மிக உயரமான கட்டிடம், நியூயார்க் நகரிலுள்ள **எம்பயர்** (Empire) என்னும் கட்டிடம் ஆகும். அதன் உயரம் 1250 அடி. இதில் 102 மாடிகள் உள்ளன.

11. **செந்தாழம்** (Pine apple) பழத்துக்கு விதை கிடையாது. செடியின் உச்சியிலிருக்கும் முடியையோ அல்லது அடித்தண்டில் கிளைக்கும் குருத்தையோ வெட்டி நட்டுப் பயிரிடுகின்றார்கள்.

O

இணையுங்கள், பார்ப்போம்!

நா. எழில்-மகிழ்நன்

குழந்தைகளே!

வணக்கம். நெடுநாட்களாக நீங்கள் தனித்தமிழ்ச் சொற்களோடும், பிறமொழிச் சொற்களோடும் பழகி வந்துள்ளீர்கள். இது தண்டமிழ்ச் சொல்; இது பிறமொழிச் சொல் என்று உங்களால் பகுத்தறிய முடியும். ஆகவே, கீழே இடப்பக்கம் தமிழ்ச்சொற்களும், வலப்பக்கம் பிற மொழிச் சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன. உங்களின் நினைவாற்றலைப் பயன் படுத்தி, தமிழ்ச்சொல்லுக்கு நேரிய பிறமொழிச் சொல்லைக் கூறுங்கள் பார்ப்போம்.

தமிழ்ச்சொல்		பிறசொல்	
1.	அரிமா	௧.	பாக்கி.
2.	வரையம்	௨.	தானியம்.
3.	பண்டுவம்	௩.	அவசரம்.
4.	அணியம்	௪.	லாபம்.
5.	மதங்கம்	௫.	தயார்.
6.	ஊதியம்	௬.	சிகிச்சை.
7.	நுண்சிதைப்பு	௭.	சிங்கம்.
8.	நிலுவை	௮.	மார்க்கு.
9.	சடுத்தம்	௯.	மிருதங்கம்.
10.	ஏந்து	௧௦.	விசாரி.
11.	கூலம்	௧௧.	சித்திரவதை,
12.	தொன்மம்	௧௨.	வாகனம்.
13.	பொந்திகை	௧௩.	பாவனை.
14.	நிலைத்திணை	௧௪.	புராணம்.
15.	கோசலி	௧௫.	ஆசாரம்.
16.	துப்புரவு	௧௬.	தந்திரம்.
17.	பாழி	௧௭.	வசதி.
18.	அணிகம்	௧௮.	இருதயம்
19.	ஒழுக்கம்	௧௯.	ஜன்னல்.
20.	நெஞ்சாங்குலை	௨௦.	ஆசிரமம்.
21.	வலக்காரம்	௨௧.	அவதி.
22.	உன்னம்	௨௨.	சுத்தம்.
23.	உசாவு	௨௩.	தாவரம்.
24.	நன்னர்	௨௪.	தேதி.
25.	பலகணி	௨௫.	போனஸ்.
26.	பக்கல்	௨௬.	திருப்தி.

(விடை 8-ஆம் பக்கம்)

கழுதை அழுத கதை

பெருஞ்சித்திரன்
(துரை-மாணிக்கம்)

“முன்னோர்கள் சொல்லிவைத்த
முதுரைகள் பொய்யென்பீர்!
பின்னோர்கள் உங்களுரை
பிழைசொல்ல மாட்டாரோ?
இப்படியே முன்பின்
இழுபறியாய் வாழ்வதல்லால்
ஒப்பி, நிகழ் காலத்தில்
ஒன்றாய்-உருப்படியாய்-
தப்பேதும் இன்றிச்
தனிச்சிறப்பாய் வாழ்வதெக்கால்?
ப்பேதை கேட்கின்றேன்;
என்னதான் சொல்கின்றீர்?

தெய்வத் திருக்குறளைத்
தேர்ந்த அறநூலாய்-
உய்வுதரும் வாழ்க்கைக்கே
உற்ற உயர்நூலாய்க்
கொண்டாடிக் கற்கின்றீர்!
கொள்கை புதைத்துவிட்டீர்!
திண்டாடித் தேய்ந்து
தெருவாடி நிற்கின்றீர்!

கற்பதனால் என்பெருமை?
என்னபயன்? கற்பவற்றில்
நிற்பதனால் அன்றோ
நிகழ்பயனைக் காண்பீர்கள்!

எல்லா உயிர்க்கும்
பிறப்பொக்கும் என்றுகற்றீர்.
கல்லாத எங்களுக்குள்
காணாத வேற்றுமைகள்

பொல்லாக் குலச்சண்டை
போட்டுடைத்துக் கொள்கின்றீர்!
நல்லதெது? தீயதெது?
நானுரைக்க வேண்டுவதோ?
கல்வியினால் தீமை
கழன்றொதுங்க வேண்டாவோ?
நல்விதையை ஊன்றினால்
நச்சுக் கனிவிளையுமோ?
கல்லார்க்கு மேலாகக்
கற்றோர்என் பாரிடத்தே
பொல்லாங்கு, தீமை,
புகலரிய தாழ்வுமனம்,
எல்லாமும் வந்தே
எழில் குலுங்கப் பூத்திருந்து,
நல்லபடி காயாய்க்
கனியாய் நனிவிளைந்து,
மண்ணுலகந் தன்னையே
மாசுறுத்தி விட்டனகாண்!
எண்ணியெண்ணி ஈங்கிவற்றால்
ஏங்காத நெஞ்சமுண்டோ?

எத்தனைப்பேர் வந்திவ்
வுலகத் திழிவகற்ற
எத்தனையாய்ச் சொன்னார்!
எதுவும் பயனில்லையே!
இத்தனை நாள் மாந்தர்க்
கெடுத்துரைத்த நல்லுரையில்
பத்திலன்று-நூறிலன்று-
பத்தா யிரத்திலொன்று
எங்களுக்குச் சொல்லி
யிருப்பாரேல் எங்களினம்
இங்கிப் படியா
இழிவடைந்து போயிருக்கும்?
கங்குல் கரைந்து
கதிரொளியும் பாய்வதுபோல்
பொங்குணர்வால் வாழ்க்கை
புலர்ந்துமணம் வீசாதா ?""

[தொடரும்]

இடங்களுக்கும் செல்லத் துணிகின்றான். பொருளியல் தேவை ஓர் அறிவுத் தேவை. அந்த அறிவுத் தேவைதான் அவனை அன்பைத் துறந்து பொருளியிலை நாடித் துரத்துகின்றது. அவன் நிலத்துக்கு எல்லையாகிய கடலையே நெருங்கும் அளவிற்குப் பொருளியலால் துரத்தப்படுகின்றான். கடலையும் கடக்கின்றான். அவனுக்கு நெய்தல் வாழ்க்கைத் தொடங்குகின்றது.

இத்தகைய நுண்ணிய வாழ்வியல் கூறுபாடுகளையெல்லாம் இயற்கை வாழ்வினராகிய தமிழ முன்னோர்கள் கூர்ந்து நோக்கித் தான், வாழ்வை அகம் புறம் என்றும், அவற்றுள் அகத்தை அறம், இன்பம் என்றும், புறத்தை மறம், பொருள் என்றும் பாகுபாடு செய்ததோடன்றி, அவர்களின் வாழ்வியல் துய்ப்புணர்வையும் நிலவியல் சார்ந்த மனவியல் அடிப்படையில், குறிஞ்சி என்றும், முல்லை என்றும், மருதம் என்றும், பாலை என்றும், நெய்தல் என்றும் வகுபாடு செய்து கொண்டனர்.

இனி, அன்பும் அறிவும் வாழ்வியல் சுழற்சியில் ஒன்றைவிட்டு ஒன்று பிரிவது போலத் தோன்றினாலும், அன்பு தனித்து இயங்குங் கால் அதுவே அறிவையும் தோற்றிக் கொள்ளவும், அறிவு தனித்து இயங்குங்கால் அதுவே அன்பையும் தோற்றிக் கொள்ளவும் செய்யும் என்று அறிந்து கொள்க. ஒரு வட்டத்தினின்று பிரிந்த பல்வேறு துணுக்குகளும் சிறுசிறு வட்டங்களாகவே இயங்குவது போல், அன்பும் அறிவும் பிரிந்தாலும், ஒவ்வொரு பிரிவின் ஒவ்வொரு நிலையிலும் அன்பும் அறிவுமாகவே உயிர்ச்சுழற்சி இயக்கங் கொள் கின்றது. எனவே அன்பினின்று அறிவைப் பிரிப்பதோ அறிவினின்று அன்பைப் பிரிப்பதோ கூடுவதன்று.

அன்பு தணிவது; குளிர்வுடையது; அடக்கமானது; இணக்கம் கொள்வது; உயிர் மலர்ச்சிக்கு அடிப்படையானது. அறிவு தணல்வது; காய்வது; முடுக்கமானது; பிணக்கம் கொள்வது; உயிர் வளர்ச்சிக்கு அடிப்படையானது. அன்பு அகமுனை நோக்கிப்பாயும்; அறிவு புறமுனை நோக்கித் தாவும். இவ்விரண்டு தன்மைகளும் பெண், ஆண் என்னும் இரண்டு வடிவங்களாகத் தோன்றியிருந்தாலும், பெண்மையுள் ஆண்மையும், ஆண்மையுள் பெண்மையும் இருப்பது போலவே அன்புள் அறிவும், அறிவுள் அன்பும் ஒடுங்கியுள்ளன என்க. ஒரு தனிப்பட்ட பெண்ணிடமோ ஆணிடமோ கூட அன்பும் உண்டு; அறிவும் உண்டு. அன்பு மழுக்கமான அல்லது அறவே இல்லாத எந்தச் சிற்றுயிரும் உலகத்தில் இல்லை. அதே போல் அறிவு மழுக்கமான அல்லது அறவே இல்லாத எந்தச் சிற்றுயிரும்

உலகத்தில் இல்லை. ஒருவர்க்கு அன்பில்லை என்பதோ அறிவில்லை என்பதோ அறியாமையின் பாற்பட்டதாகும்.

சமயத்துள்ளும், இறைவனை அன்பாலும் அடையலாம், அறிவாலும் அடையலாம் என்பர். அவர்கள் அன்பு நிலையைப் பத்தி நிலை என்றும், அறிவு நிலையை ஞான நிலை அஃதாவது மெய்யறிவுநிலை என்றும் பாகுபாடு செய்வர். மெய்யறிவுக் கூறுபாட்டில் அறிவைவிட அன்பே இறைப்பொருளை அடையும் எளிய வழி என்று சமயகுரவர்கள் விதந்துரைப்பர். அன்பு உணர்வதற்கும் பற்றுவதற்கும் எளிது என்பதாலும், அறிவு உணர்தற்கும் பற்றுவதற்கும் அரிது என்பதாலுமே அவ்வாறு அவர்கள் சொல்வர். இஃது ஓரளவு உண்மையே எனினும், மாந்த உயிருக்கங்கள் வேறுபடுவன வாகலின் இவ்வரையறை பொருந்துவதன்று.

நுண்பொருளுணர்வுச் சேர்க்கையாலும், பருப்பொருளுணர்வுச் சேர்க்கையாலும்; இயல்பூக்கச் சூழலாலுமே ஒருவர்க்கு அன்போ அறிவோ, அல்லது இரண்டுமோ சிறந்து விளங்கும். ஒருவர்க்கு அன்பு மிகுந்து அறிவு குறைந்திருக்கலாம்; பிறநொருவர்க்கு அறிவு மிகுந்து அன்பு குறைந்திருக்கலாம். சிலர்க்கு இரண்டு தன்மைகளும் குறைந்திருக்கலாம்; அல்லது மிகுந்திருக்கலாம் இவற்றுள் எதுவும் தவறு இல்லை. இதுதான் சரி; இது தப்பு என்று வரையறுக்கும் இயல்புடையவர்க்கு மாறுபட்ட இணையுணர்வு இருக்கும். அஃதாவது அன்புமிகுந்த ஒருவராக ஒருவரைக் கண்டால், காணுகின்றவர்க்கு அறிவுணர்ச்சி மிகுந்திருக்கும். அறிவு மிகுந்த ஒருவராக ஒருவரைக் கண்டால் காணுகின்றவர்க்கு அன்புணர்ச்சி மிகுந்திருக்கும். இனி, அன்பு குறைந்த ஒருவராக ஒருவரைக் கண்டால் காணுகின்றவர்க்கு அறிவுணர்ச்சி குறைந்திருக்கும். அறிவு குறைந்த ஒருவராக ஒருவரைக் கண்டால் காணுகின்றவர்க்கு அன்புணர்ச்சி குறைந்திருக்கும்.

பெரும்பாலும் மெய்யறிவு நிலையில் ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்கின்ற தன்மைக்கு நான்கு இணை உணர்வுகள் அடிப்படையாகவுள்ளன. காண்கின்றவர்க்கு அன்பு, அறிவு எனும் இரு நுண்ணுணர்வுகள். காணப்படுகின்றவர்க்கு அன்பு, அறிவு எனும் இருநுண்ணுணர்வுகள். இந்த நான்கும் அளவு நிலைகளான் எப்பொழுதும் சமமாக இரா. ஒருவரில் நுண்ணுணர்வுகள் மற்றவரின் எதிர்நிலை நுண்ணுணர்வுகளையே அவாவும் தன்மையன. அஃதாவது ஒருவரின் அன்பு இன்னொருவரின் அறிவையே அவாவும். இனி, காண்பவர் காணப்படுபவர் இருவரும் பால் வேறுபட்டிருப்பார்களாயின் அக்கால் ஆறு இணைவுணர்வு நுண்மங்கள் அடிப்படையாகவுள்ளன என அறிதல் வேண்டும். இவற்றின் விளக்கங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

ஊர்பெயர்-தமிழ்ச்சொற்கள்

தொகுப்பு: **கதிர்-சுப்பையன்,**
ஆசிரியர், நகராட்சிப்பள்ளி, குடந்தை.

வேற்றுச்சொல்—தமிழ்ச்சொல்	வேற்றுச்சொல்—தமிழ்ச்சொல்
பக்ஷிதீர்த்தம் — திருக்கழுக்குன்றம்	காஞ்சீபுரம் — காஞ்சிபுரம்
விருத்தாஜலம் — திருமுதுகுன்றம் (பழமலை)	திருவறம்பூர் — திருவெறும்பியூர்
வேதாரண்யம் — திருமறைக்காடு	பழனி — பழநி (பொதினி)
ஸ்வேதாரண்யம் — திருவெண்காடு	ஆற்காடு — ஆர்க்காடு
மாயூரம் — திருமயிலாடுதுறை	இராமனாதபுரம் — முகவை
லால்குடி — திருத்தவத்துறை	உதகமண்டலம் — ஒற்றைக்கல்மந்து.
ஸ்ரீவில்லிபுத்தூர் — திருவில்லிபுத்தூர்	ஆந்திரம் — அண்டிரம்
ஸ்ரீரங்கம் — திருவரங்கம்	கேரளம் — சேரலம்
ஸ்ரீசைலம் — திருப்பருப்பதம்	மதராஸ் — தமிழ்நாடு (மதிலூர்)
நீலகிரி — நீலமலை	மைசூர் — எருமையூர்
சிதம்பரம் — தில்லை	பந்தநல்லூர் — பந்தணைநல்லூர்
தர்மபுரி — தகடூர் (அறநகர்)	மைலாப்பூர் — மயிலாப்பூர்
வைத்தீஸ்வரன்கோவில் — புள்ளிருக்கு வேளூர்	மகேந்திரப்பள்ளி — மயேந்திரப்பள்ளி
கும்பகோணம் — குடந்தை (குடமூக்கு)	திருவிசலூர் — திருவியலூர்
குத்தாலம் — திருத்துறுத்தி	செய்யார் — செய்யாறு
கன்யாகுமரி — குமரி	அடையார் — அடையாறு
சாக்கோட்டை — திருக்கலயநல்லூர்	பரசலூர் — பறியலூர்
சேங்கனூர் — திருச்சேய்ஞலூர்	கொரநாடு — கூறைநாடு
மருதாநல்லூர் — திருக்கருக்குடி	தேரழுந்தூர் — திருவழுந்தூர்
திருவாடுதுறை — திருவாவடுதுறை	திருவிழந்தூர் — திருஇந்தளூர்
திருப்பாப்புலியூர் — திருப்பாதிரிப்புலியூர்	திருவாளப்புத்தூர் — திருவாளொளிப்புத்தூர்
கொருக்கை — திருக்குறுக்கை	செங்கற்பட்டு — செங்கழுநீர்ப்பட்டு
	பொள்ளாச்சி — பொழில்வாச்சி
	கல்கத்தா — காளிக்கோட்டம்
	குன்னூர் — குன்றூர்

(இணையுங்கள், பார்ப்போம்! - விடை)

1—௭; 2—௮; 3—௬; 4—௫; 5—௯;
6—௪; 7—௧௧; 8—௩; 9—௧; 10—௧௭;
11—௨; 12—௧௪; 13—௨௬; 14—௨௧; 15—௨௩;
16—௨௨; 17—௨௰; 18—௧௨; 19—௧௫; 20—௧௮;
21—௧௬; 22—௧௩; 23—௰; 24—௨௫; 25—௧௯;
26—௨௪.

மாந்தனுக்கு மூன்றுவது கண் இருக்கிறதா?

பர். இ. ஐ. சரசோவ்,

சீவனுக்கு 'நெற்றிக் கண்' இருப்பதாகப் பழங்கதைகள் கூறுகின்றன. நீரிலும், நிலத்திலும் வாழும் உயிரிகளுக்கு மூன்று கண்கள் ஒரு காலத்திலிருந்தன, மூன்றுவது கண் கழுத்திலிருந்தது. கூர்தலற வளர்ச்சியில் அந்தக் கண் என்ன ஆயிற்று? இன்றைய மாந்தனுக்கும் அந்த மூன்றுவது கண் இருக்கிறதா?

மாந்த உடலின் ஒவ்வொரு சிறுநூற்றளவையையும் உடற்கூறு இயலாளர்கள் பகுத்து ஆராய்ந்துள்ளனர். என்றுலும்கூட நமது உடலிலும் சில 'இருட்டறைகள்' இருக்கத்தான் செய்கின்றன. உடலிலுள்ள சில உறுப்புகளை நெடுங்காலத்திற்கு முன்னரே உடற்கூற்றியலாளர்கள் கண்டுபிடித்து விட்ட போதும்கூட, அவற்றின் வேலைகள் இன்னவைதாம் என்று அறுதியிட்டுக் கூற முடியவில்லை. எடுத்துக்காட்டாக, மண்டையில், மூளையினுல் மறைக்கப்பட்டு அதன் ஆழத்தில் ஒரு சிறிய உறுப்பு உள்ளது. அதன் பெயர் 'எபிபைசிசு' என்பதாகும். அதன் மொத்த நிறை அரைச்சிற்றெடை (கிராமு)க்கும் குறைவாகும். குழந்தைகள் உடல் பக்குவமடையத் துவங்கும் போது 12—14 அகவையில் இந்த 'எபிபைசிசு' செயல்படுகிறது என்றும், 18-ஆவது அகவையில் இது கடினமாகி விடுகிறது என்றும், 25 அகவை வருவதற்குள் அது முற்றிலும் இறந்து விடுகிறதென்றும் நம்பப்பட்டு வந்தது. அந்த உறுப்பு இறந்து விட்ட போதிலும், ஏதும் பலனின்றி, மாந்த உடலினுள்ளேயே இருப்பதாகக் கருதினர்.

அண்மைக்கால ஆராய்ச்சியின் முடிவுகள் வேறுவகையாக உள்ளன. மாசுக்கோவிலுள்ள நடுவண் ஆய்வுக்கூடம் 'எபிபைசிசு' மற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டது. அந்த ஆராய்ச்சியின் பயனுக ஒரு செய்தி மிகத் தெளிவாயிற்று; அஃதாவது, 'எபிபைசிசு' என்னும் உறுப்பு இளஅகவையில் மட்டுமன்றி 40, 60, 70, அகவையிலும் செயல்பட்டுக் கொண்டேதான் உள்ளது; இதுகாறும் நம்பப்பட்டு வந்ததைப் போல அஃது இறந்து விடுவதில்லை, உடலின் பல்வேறு நிலைகளுக்கேற்றுற்போல, அதன் செயல்திறனும்

மாறுபாடடைகிறது. காட்டாக உடல் புற்று நோயால் ஊறுபாடடையும் போது, 'எபிபைசிசு' உறுப்பும் உருவில் பெரிதாகிறது. அரத்த மிகு அழுத்தம் போலும் நெஞ்சாங்குலை நோய்களின் போது, அதிலுள்ள ஒளிக்கண்ணறைகளுக்கும், இருண்ட கண்ணறைகளுக்குமுள்ள ஒப்புமை மாறுகிறது. எப்படியும், மாந்த வாழ்நாள் முழுவதும் இயங்கிவரும் உறுப்புதான் 'எபிபைசு'

எபிபைசிசுவிலிருந்து, இதற்கு முன்னர் நாம் அறிந்திராத இரண்டு தூண்டணுக்கள் ஆராய்ச்சிக் கூடத்தில் தனித்தெடுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று, உடலின் 'பொட்டாசியம்' வளர்சிதை மாற்றத்தைத் தாக்குகிறது; மற்றொன்று பாலுறவுச் செயல் முறைகளைத் தாக்குகிறது.

'பொட்டாசியமும்,' 'சோடியமும்' வாழ்வின் அடிப்படை ஆகும்; அந்த அடிப்படையின்றி எந்த உயிர்ப் பொருளும் இயங்க முடியாது. அவைதாம் நெஞ்சாங்குலையின் வேலையையும், கண்ணறைகளின் வாழ்வையும், நரம்புகளின் கடத்தும் திறனையும் உறுதி செய்பவை ஆகும். குறிப்பாக, 'பொட்டாசியம்' வளர் சிதை மாற்றக் கோளாறுகளினால்தான், நெஞ்சாங்குலை இயக்கக் கோளாறு ஏற்படுகிறது. சில நெஞ்சாங்குலை இயக்கக் கோளாறுகளைச் சீராக்க, 'பொட்டாசியம்' செலுத்தப்படுகிறது. அஃது எவ்வாறு நிகழ்கிறது, அதன் உண்மை என்ன என்பதையெல்லாம் அறிய அறிஞர்கள் முயன்று வருகின்றனர்.

'எபிபைசிசு, குறித்த ஆராய்ச்சி மிகவும் சிக்கலானது என்பதையும் நாம் இங்குக் குறிப்பிட வேண்டும், அவை சுரக்கும் தூண்டணுக்களின் அளவோ மிகமிகக் குறைவு. எடுத்துக்காட்டாக உடலில் 'பொட்டாசியம்' அளவைக் கட்டுப்படுத்தும் தூண்டணுவில் 4 நுண்ணெடைகளைப் பெற 30, 000 எருதுகளிலிருந்து 'எபிபைசிசு' எடுக்கப்பட வேண்டும்.

இந்த உறுப்பு சுரக்கும் மற்றொரு தூண்டணுவும் மிக முகாமையானதே! அது குறித்து தற்போது ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மருமச் சுரப்பியை "மூன்றாவது கண்" என்று கூறுவதற்கும் அடிபபடைகள் உள. ஏனெனில் இந்தச் சுரப்பியின் வேலை, ஒளி நிலைமைகளைப் பொறுத்து உள்ளது. இருட்டில் அதன் வேலை

விரைவடைகிறது. ஒளியில் வைத்தால் அதன் இயக்கம் மட்டுப் படுகிறது. அஃதாவது, 'எபிபைசிசு' ஒளியை உணருகிறது.

அப்படியானல் நமது மண்டைப் பகுதியின் உள்ளே 'மூன்ருவது கண்' ஒன்று நமக்கு மறைவாக வைக்கப்பட்டிருக்கிறதா?

இருக்கலாம்! ஏன் கூடாது? கூர்தலற ஏணிப் படிகளில், நம் நீண்ட நெடுங்கால முன்னேர்களான 'ஆம்ஃபிபியா' என்ற, நீரிலும் நிலத்திலும் வாழ்ந்த உயிரிகளுக்கு மூன்ருவது கண் ஒன்று கழுத்தில் இருந்தது இல்லையா? அந்தக்கண், கூர்தலற வளர்ச்சியில் தேவை யற்றதாகி, மூளையின் ஆழத்தில் புதைந்து, நாளமில் சுரப்பு வேலை களில் ஈடுபடத் தொடங்கியிருக்கலாம்; என்ருலும் ஒளியை உணரும் தன்மையை அஃது இன்றளவும் தன்னிடத்துக் கொண்டுள்ளது.

எபிபைசிசினது இந்த ஒளி உணர் தன்மையின் காரணியமாக உடலில் நிகழும் பல உடலியல் செயல்களைத் தூண்டும் ஆற்றலாக ஒளி விளங்குகிறது. எடுத்துக்காட்டாக பகற்பொழுது நீடித்து இருக்கும் காலத்தில் சில உயிரிகளின் பாலுறவு உணர்ச்சி தூண்டப் படுவதற்கு, எபிபைசிசே கரணியமாகும், எனவே, புறச் சூழ்நிலையில் நிகழும் நிகழ்ச்சி இயக்கங்களைப் பகுத்தறியும் உறுப்பாக எபிபைசிசு விளங்குகிறது எனலாம். சுற்றுப்புற இயக்கங்களுக்கு ஏற்றவாறு உயிரிகளின் உயிர்முயற்சி இயக்கங்களை ஓரளவுக்கு அவ்வுறுப்பு கட்டுப் படுத்துகிறது.

சப்பானிலும், பிறநாடுகளிலும் கோழிகளை நிலையான ஒளியில் வைத்து, அவை நாளொன்றுக்கு இருமுறை முட்டைகளிடுமாறு செய்யப்படுகிறது. ஒளியினுல் தூண்டப்படும் 'எபிபைசிசு' உறுப்பே இதற்கும் கரணியமாகிறது.

எபிபைசினது பங்கு பற்றி இங்கு கூறப்பட்டவைய னைத்தும் மேலும் ஆராயப்பட்டு வருகின்றன. முழுமையாக, அதன் வேலை பற்றித் தெரியவந்தால், மருத்துவத் துறைக்கு அது பெரும் பயனுள்ளதாக இருக்கும். நாளமில் சுரப்பிகளின் செயல்முறையுடன் தொடர்புள்ள புற்றுநோய்க் கட்டிகளுக்கு, தூண்டணுப் பண்டுவம் அளிப்பதற்கு அஃது உதவும். இத்துறையில் ஆராய்ச்சிகள் தொடங்கப் பெற்றுச் சில காலமே ஆகியுள்ளதால், வருங் காலத்தில் இன்னும் நாம் மிகுதியாக 'எபிபைசிசு' பற்றித் தெரிந்து கொள்ளக் கூடும். O

உங்களால் முடியுமா!

—கயற்கண்ணி.

பொன் (தங்கம்) என்னுஞ் சொல்லை நாம் பிறிதொரு சொல்லோடு இணைத்தெழுதும் போது, அஃது அப்பொன்னாலான ஒரு பொருளையோ, அல்லது அப் பொன்னைப் போன்ற பயனும், அழகும், கவர்ச்சியும் உடைய வேறொன்றையோ குறிக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். எடுத்துக்காட்டாக பொன்னகை, பொன்மணி என்பவை முறையே பொன்னால் செய்யப் பெற்ற ஒரு நகையையும், மணியையும் குறிப்பவையாகும்; ஆனால் உயிருள்ள வண்டினங்களில் ஒரு வகையை 'பொன் வண்டு' என்று குறிப்பது, பொன்போன்ற அதன் அழகும் கவர்ச்சியும் கருதியேயாகும். இது போன்ற சொற்கள் சிற்சில சமையங்களில் ஊர்ப் பெயரையும், கோயிலின் பெயர்களையும் கூடக் குறிப்பது காண நீங்கள் வியப்படைவீர்கள். அவ்வாறே கீழே கொடுக்கப் பட்டுள்ள சொற்கள் எவ்வெவற்றைக் குறிக்கின்றன என்று உங்களால் கூற முடியுமா? முடியவிட்டால் விடைகளைப் பாருங்கள்.

க பொற் கொம்பு (Golden Horn).
உ பொற் கன்று (Golden Calf).
ரு பொற் கோயிலை (Golden Temple).
ச பொற் கண் (Golden eye).
ரு பொற் காலம் (Golden age).
சு பொன்மலை (Golden Rock).

(விடை 15–ஆம் பக்கம்)

மயிர் முனையில் கத்தியும் அதன் கீழ் மாந்தனும்

முன்னொரு காலத்தில் அமெரிக்காவில் உள்ள சிராகியூசு (Syracuse) என்னும் நாட்டை டயோனிசியசு (Dyonisius) என்னும் ஒரு மன்னன் ஆண்டு வந்தான். இவன் ஒரு கொடுங்கோலன். தன் குடிமக்களைச் சிறிதும் மதியாதவன். இவனுடைய சில செயல்கள் வியப்பானவையும், முட்டாள்தனமானவையும் ஆகும். எடுத்துக் காட்டாக ஒன்றைப் பார்ப்போம்.

ஒருநாள் இவன், நாட்டை ஆளும் ஒரு மன்னனின் நிலைமை எவ்வளவு பேரிடர் நிறைந்த இக்கட்டான செயல் என்பதைத்

தன் குடிமக்களுக்கு விளக்க விரும்பினான். ஒரு மயிரிழையின் முனையில் நன்கு கூராக்கப்பட்ட கத்தி ஒன்றை உயரே கட்டித் தொங்க விட்டான். அக் கத்திக்கு நேர் கீழே தன் அற மன்றத்தில் பணி புரிந்த தமாக்ளசு (Domacles) என்னும் பணியாளனைக் கட்டாயப் படுத்தி உட்காரச் செய்தான். அருகில் நின்ற மக்கள் அனைவரும் எந்த நொடியில் கத்தி மயிரினின்று அறுபட்டு தமாக்ளசின் உயிரைக் குடிக்குமோ என்று அஞ்சினர். "எனது நிலையும் இப்படிப் பட்டதுதான்" என்று மக்களை நோக்கிக் கூறினான், அம் மன்னன்.

மக்களுக்குத் தன் நிலையை விளக்கிட அம்மன்னன் கையாண்ட முறை வியப்பிலும், வியப்பாக இருக்கிறதன்றோ!

கயற்கண்ணி—தஞ்சாவூர்.

தெரிந்து கொள்ளுங்கள்!

0 கிவி பறவைக்கு இறக்கைகளே இல்லை; நீரே குடிப்பதில்லை; கிவி பறவையின் முட்டை அதன் எடையில் $\frac{1}{4}$ பாகமாகும். ஆண் பறவைதான் முட்டையை அடைகாக்கும். ஓர் ஆண்டிற்கு ஒரு முட்டைதான் இடும்.

0 கதிரவனுக்கு மிக அருகில் உள்ளவை அறிவனும், வெள்ளியு மாகும். இவற்றை அடுத்துத் தான் நாம் வாழும் ஞாலம் உள்ளது.

0 கிளி நூறு அகவை வரை உயிருடன் வாழுமாம்.

0 உலக விளைவில் பாதிக்கு மேற்பட்ட இழுவை (Rubber) மலேயாவிலிருந்து கிடைக்கிறது.

0 உலகில் கிடக்கும் 'ஆண்டிமணி' (Artimory) யில் பாதிக்கு மேலாக சீனாவில் உள்ள கூனானில் கிடைக்கிறது. இஃது மாழை யிலும், மாழையில்பொருளிலும் சேராத, மாழைப் போலியாகும்.

0 மலைக் கழுகு நூற்று அறுபது அகவை வரை உயிர் வாழுமாம். இது மூன்று கல்லுக்கு அப்பால் உள்ள பொருள்களைக் கூடத் தெளிவாகக்காணும் இயல் புடையது.

0 வண்ணத்துப் பூச்சி அளவேயுள்ள ஒரு பறவை தான் உண்பதை எப்பொழுதும் நிறுத்துவதே இல்லை. மூன்று, நான்கு மணித்துளி களுக்குள்ளே மீண்டும், மீண்டும் பசி எடுத்து விடுமாம்.

— (தொகுப்பு, ப. ஆறுமுகம், வத்தக்கவுண்டன் வலசு.

கசடறக் கற்ற மன்னர்!

-இறை மகிழ்நன், தஞ்சை.

17-ஆம் நூற்றுண்டின் இறுதியிலும், 18-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் உருசிய நாட்டைப் பீட்டர் என்னும் மன்னர் ஆண்டு வந்தார். இவரைப் "புகழ் மிக்க பீட்டர்" (PETER THE GREAT) என்று வரலாற்று ஆசிரியர் கூறுவர். இவர் அரியணை ஏறிய காலை உருசிய நாடு மூடநம்பிக்கையிலும்;பெண்ணடிமைத் தனத்திலும்,குடி வெறியிலும் மூழ்கி, சீரழிந்து கிடந்தது. நாட்டின் சீர்கேடான பொருளியல் நிலையும், மக்களின் கீழ்த்தரமான வாழ்க்கை நிலையும் கண்டு பீட்டர் உளம் நொந்தார். இவற்றை யெல்லாம் ஒழித்து நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல மன்னர் உறுதி மேற்கொண்டார்.

அம் முடிவிற்கிணங்க அவர் மாற்றுருவம் புனைந்து மேலை ஐரோப்பாவுக்குச் சென்று அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலைகளை ஆராயத் தொடங்கினர். தம்மை ஐரோப்பாவில் உள்ள உருசிய நாட்டுத் தூதுவர் அலுவலகத்தில் பணிபுரியும் ஒரு கடை நிலை ஊழியர் என்று கூறி கொண்டார். மேலை ஐரோப்பிய நாடுகளின் வளர்ச்சியும் நாகரிக முதிர்ச்சியும் கண்டு வியந்தார். அந் நாடுகளோடு ஒப்பிடும் போது தன்னுடைய நாடு எவ்வளவு பின்தங்கிய நிலையில் உள்ளது என்று எண்ணி அதிர்ச்சியும், மனவருத்தமும் அடைந்தார்.

மேலும், கப்பல் கட்டும் கலையை அறிந்து கொள்வதில் அவர் காட்டிய ஆர்வம் நமக்கு மிகவும் வியப்பை அளிக்கும் ஒரு நிகழ்ச்சி யாகும். கப்பல் கட்டும் கலைபற்றிய நுணுக்கங்களை அறிந்திட அவர் கையாண்ட முறை, இக்கால மாணவர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய இன்றியமையாத ஒன்றாகும். போர்த்துக்கீசிய நாட்டிலும், ஆங்கில நாட்டிலும் உள்ள கப்பல் கட்டும் கூடங்களில், கற்கும் தொழிலைக் கசடறக் கற்க வேண்டியும்,தொழில் நுணுக்கம் அறியும் ஆர்வ மேலீட்டாலும், தாம் ஒரு பெரிய நாட்டின் மன்னர் என்பதையும் வெளிக் காட்டாது, ஒரு தச்சுத் தொழிலாளியாகவே பணி செய்தார்! ஒரு தொழிலைக் கற்கும்போது அதைப் பிழையறக் கற்க வேண்டும் என்றும், அவ்வாறு கற்றுக் கொள்ளும் பொருட்டுத் தன்னையே ஒரு தச்சுத் தொழிலாளியாக மாற்றிக் கொண்ட அம் மன்னரது உள்ளப் பாங்கு, எண்ணுந்தோறும் வியப்புக்குரியதொரு செயலன்றோ!

கல்வி முத்துகள்!

0 கல்வியின் தலையாய நோக்கம் செயலாற்றும் ஆற்றலேயல்லாமல் செய்தியறிவு பெறுவதொன்று மட்டுமன்று.

—எர்பர்ட் இசுப்பென்சர்.

0 கல்வி என்பது மாந்தனுடைய உள்ளுணர்வை வெளிப்படுத்துவதற்கு அமைந்தது. கட்டுப்பெட்டியாகச் சிறைப்படுத்துவதற்கன்று.

—நேரு

0 வாழ்க்கை என்பது கல்விக்கூடம். அதில் கல்வி பயில வந்தவர்கள் நாம். மூளையும் நெஞ்சமும் இணைந்து செழுமையாக வேலை செய்யாவிட்டால் இந்தக் கல்விக் கூடத்தில் நம்மால் கல்வி பயில முடியாது. ஆட்டுமந்தைகளாய் இந்த உலகமாகிய பரந்த புல்வெளியில் விரட்டப் படுவோம்.

—தாகூர்.

0 கருத்தூன்றாமல் படித்தால் மனத்திற்குக் குழப்பம் தரும். படியாதபடி கருதினால் மனத்தின் சமநிலையைக் கெடுத்துவிடும்.

—சீனப்பழமொழி

0 ஓர் ஐயம் பிறந்துவிட்டால் கல்வி தொடங்கிவிட்டது என்று பொருள்.

—கோல்டன் உரோனால்டு.

0 படிப்பு ஒருவனை நிறைவுடையவனாக்குகிறது. கேள்வி அவனை எதற்கும் அணியமுடையவனாக்குகிறது, எழுதுதலே அவனுக்கு உறுதி தருகிறது.

—பிரன்சிசு பேகன்.

0 கல்வி கற்றவரை எளிதில் நல்வழியில் திருப்பலாம். ஆனால் ஏமாற்ற முடியாது, எளிதில் ஆளலாம், ஆனால் அடிமைப்படுத்த முடியாது.

—உரேகா பெருமகனார்

தொகுப்பு—வலியடியோன்.

(உங்களால் முடியுமா-விடை)

௧. இசுத்தான்புல் நாட்டில் உள்ள ஒரு கப்பல் துறைமுகம்.

௨. ஐரோப்பாக் கண்டத்தில் ஆரோன் என்பவரால் நிறுவப்பட்ட ஒரு பசுங்கன்றின் பொற்சிலை.

௩. சீக்கியர்களின் கோயில் (வட இந்தியாவில் உள்ளது).

௪. கடலில் வாழும் ஒரு வகை வாத்தின் பெயர்.

௫. பண்டைக்கால முடிமன்னர்களின் ஆட்சியில் நாடும் மக்களும் மேன்மையுற்றிருந்த காலம்.

௬. தமிழ் நாட்டில் உள்ள ஓர் ஊரின் பெயர்.

முத்துமொழிகள்

- சட்டம் எனப்படுவது ஒரு கழுதை. கந்தலாலும் கிழிசலாலும் தவறுகளை மறைக்க இயலாது. ஆனால் பட்டாடை மறைக்கும் பொழுது சட்டத்திற்குக் கண் தெரிவதில்லை. —சேக்சுபியர்.
- முட்டாளுக்கு அமைதியாக இரு என்று கூறுவதை விட உயர்ந்த அறிவுரை எதுவுமில்லை. —பெர்னாட்சா.
- தாயின் அன்பை வெளியிட இந்த உலகத்தில் உள்ள எந்த மொழியிலும் சொற்கள் இல்லை. —சோடின்.
- அறிவு மிக்க ஒரு தாய் ஆயிரம் ஆசிரியர்களுக்கு ஒப்பானவள் —பரோர்.
- செடியானது வேர், கிளை, இலை, பூ, கனி என்று முன்னேறுவதைப் போல, நாம் இயற்கை, உணர்ச்சி, எண்ணம், அறிவு, செயல் என்று முன்னேற வேண்டும். —எமர்சன்.
- உழைப்பில் பெருந்தன்மையும் மாந்தத் தன்மையும் உள்ளன. உண்மையான உள்ளத்துடன் உழைப்பவனுக்கு எந்நாளும் உறுதியாகப் பலன் உண்டு. —கார்லைல்.
- எல்லாம் போய் விட்டதென்று கவலைப்பட வேண்டாம். எல்லாம் போய் விடவில்லை. எக்காலத்திலும் யாராலும் வெல்ல முடியாத உள்ளம் உன்னிடம் உள்ளது. அதைக் கொண்டு எதையும் நிறைவேற்றி விடலாம். —சான் மில்டன்.
- கல்வியின் வேர் கசப்பாகத்தான் இருக்கும். ஆனால் அதன் கனியோ அடடா! அதன் சுவையே தனிதான். அதைப் போல் சுவையுள்ள வேறொரு கனி எங்குமே கிடையாது. —அரிசுடாட்டில்
- பொத்தகந்தான் எனது உறவு, நண்பன், காதலி, கோயில் ஆகிய எல்லாமே. ஏன் எனது செல்வமே அதுதான் —கேளயன்னி.
- பொறுமை பணம், வலு, போன்ற எதனையும் வெல்லும் ஆற்றல் கொண்டது. —இத்தாலியப் பழமொழி,
- பொறுமை ஒரு கசப்பான மூலிகைதான். ஆனால் அது வழங்குவதோ இனிக்கும் பலன்களைத்தான். —இலாபான்டைன்
- தன் வேலையை விரும்புபவனும், மிச்சம் பிடிக்கத் தெரிந்தவனும் எங்கிருந்தாலும் நல்ல முறையில் வாழ்வான்; வளமுறவும் செய்வான். —சைசு.
- உண்மையும் அன்பும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகும். அந்த நாணயம் ஒன்றுதான் எங்கும் செல்லும். மற்றவை எல்லாம் செல்லாக் காசுகளே! —மகாத்மா காந்தி.

(தொகுப்பு: இரவி. தி. இளங்கோவன்)

தமிழ்ச் சொல் வளம்.

மரக்கல வகை:

புணை-நீரில் மிதக்கும் கட்டை.
தெப்பம்-பல மிதப்புக் கட்டைகளின் சேர்க்கை.
கட்டுமரம்-இருகடையும் வளைந்த மரக்கட்டு.
தோணி-தோண்டப்பட்ட மரம் போல்வது,
ஓடம்-வேகமாய்ச் செல்லும் தட்டையான தோணி.
திமில்-திரண்ட மீன் படகு.
ப.்றி-பன்றி போன்ற வடிவமுள்ள தோணி.
பரிசில்-வட்டமான பிரம்புத் தோணி;
அம்பி-விலங்குமுகம் அல்லது பறவைமுகம் போன்ற முகப்பையுடைய மரத்தோணி.
படகு-பாய் கட்டிய தோணி.
நாவாய்-நீரைக் கொழித்துச் செல்லும் போர்க்கலம்;
கப்பல்-பலபாய் கட்டி வணிகச் சரக்கேற்றிச் செல்லும் பெருங்கலம்.

கருவி வகை:

கருவி-பருப்பொருள் ஆயுதப்பொது. (Instrument)
ஆயுதம்-ஒரு தொழிற்குரிய கருவி. (Tool.)
படை-போர்க் கருவி (Weapon)
கரணம்-அறிவுக் கருவி அல்லது உறுப்புக் கருவி.
காரணம்-காரியத்தை விளைவிப்பது. (Cause)
ஏது-வாதக் காரணம் (Reason)
முதல்-வணிக முதல் போன்ற முதனிலை.
அடி-மரத்தின் அடிபோன்ற முதனிலை.
மூதம்-மரத்தின் வேர்போன்ற முதனிலை.
வித்து-மரம் முளைத்த விதை போன்ற முதனிலை;
தலைக்கீடு-போலி ஏது (Pretext)

தெருவகை:

முடுக்கு-சிறுசந்து; சந்து-தெருவின் கிளை.
தெரு-சிறுவீதி; மறுகு-போக்குவரத்து மிகுந்த பெருந்தெரு அல்லது வீதி.
ஆவணம்-கடைத்தெரு. அகலுள்-அகன்ற மறுகு.
சாலை-பெருவழி (Road) சந்தி-மூன்று தெருக்கள் கூடுமிடம்.
சதுக்கம்-நான்கு தெருக்கள் கூடுமிடம்.

(பாவாணர்-சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்)

தொடர்: 8

கிறித்துவப் பெயர்களுக் கேற்ற தமிழ்ப் பெயர்கள்.

ஆடவர் பெயர்த் தொடர்ச்சி:

கிறித்துவப் பெயர்.	எந்த மொழி.	அதன் பொருள்.	அதற்கேற்ற தமிழ்ப்பெயர்.
பெராண்டு. Farand.	தியுத்தானியம்	கவர்ச்சியான இனிமையான.	கவர்பன். இனியன்.
பெலிக்சு Felix	இலத்தின்.	ஆகூழ் உள்ள.	ஆகூழோன்.
பெர்டினண்டு Ferdinand.	தியுத்தானியம்.	துணிவான மறத்தனம்.	மூணமற வோன்.
பெர்குசு. Fergus.	கெல்திக்	சிறந்த தேர்வு. வலிவுள்ளவன்.	நனிதேரல். வலியன்.
பிலமிங் Fleming.	சாக்சானியம்.	டச்சு நாட்டினன்.	தச்சினன்.
புலோரியன். Florian.	இலத்தீன்.	மலர் போன்றவன்	மலரோன்.
பிரான்சிசு Frangis.	தியுத்தானியம்.	கட்டற்ற விடுவிக்கப்பெற்ற.	கட்டறுத் தோன். விடுதலையன்.
பிராங்க்ளின் Franklin.	,,	,,	,,
பிரீமன் Freeman.	சாக்சானியம்.	யாருமில்லாத தனியாள்.	தனியன்.
பிரடெரிக்கு Frederick.	தியுத்தானியம்.	அமைதியான தலைவன்.	அமைவோன். அமைதிறல்.
கபிரியேல் Gabrile	ஈபுரு.	எல்லாம் வல்ல இறைவன்.	வல்லிறை யோன். இறைவன்.
கேல். Gale.	கெல்திக்.	வாழ்க்கைக் குரிய.	வாழ்நன்.
கால்வின் Galvin.	,,	ஊர்க்குருவி சிட்டுக்குருவி.	குருவியன் சிறும்புள்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.